Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

| | |
|---|---|
| Case Number | : CC.No. 59/2017 |
| Police station | : நெல்லிக்குப்பம் |
| Deposition of witness for Prosecution | : LW11 / PW11 |
| Name | : திரு. ராமநாதன் DSP ஓய்வு |
| Father Name/Husband Name | : |
| Village | : |
| Cuddalore | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 24.06.2026 நாளாகிய இன்று SELVI.R.SRINITHI BA. LL.B(HONS) LL.M நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

(1வது எதிரி இறந்துவிட்டார். 2வது எதிரி ஆஜர். ).

**முதல் விசாரணை:**

நான் காவல் துறையில் துணை கண்காணிப்பாளராக பணி புரிந்து தற்போது பணி ஓய்வில் உள்ளேன். கடந்த 11.03.2015ம் தேதி நெல்லிக்குப்பம் காவல் நிலையத்தில் குற்றப்பிரிவு உதவி ஆய்வாளராக திரு. கே. நாகூரான் என்பவர் 009 மணிக்கு நிலைய பொருப்பில் இருந்போது காராமணிக்குப்பம் சீதாராமன் நகரைச்சேர்ந்த கோபால்சாமி மகன் செல்வகுமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று நெல்லிக்குப்பம் காவல் நிலைய குற்ற எண். 117/2015ல் சட்டப் பிரிவுகள் 457, 380 இதசவின் படி வழக்கு பதிவு செய்து கணிணி முதல் தகவல் அறிக்கை தயார் செய்தும் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். பின்னர் வழக்கு புலன் விசாரணை செய்து சாட்சிகள் செல்வகுமார், சாந்தி, வச்சலா, சீனிவாசன், முனுசாமி, கமலக்கண்ணன், சுரேஷ் ஆகியோர்களை தனித்தனியாக

விசாரணை செய்தும் வாக்குமூலம் பதிவு செய்தார். இவ்வழக்கில் காணாமல் போன சுமார் 8 பவுன் நகைகள் அனைத்தும் கண்டு பிடிக்க முடியாததால் இவ்வழக்கினை 25.02.2016ம் தேதி உதவி ஆய்வாளர் திரு. பரமசிவம் என்பவர் RCS மற்றும் 4/2016ன் படி கனம் நீதிமன்றத்தில் கண்டுபிடிக்க முடியாத வழக்காக இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார். இந்நிலையில் கடந்த 11.02.2017ம் தேதி பகல் 10.00 மணிக்கு நான் காவல் ஆய்வாளராக நெல்லிக்குப்பம் காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது குற்றப் பிரிவு உதவி ஆய்வாளர் மற்றும் போலிஸ் பார்ட்டி சகிதம் வான்பாக்கம் பென்னை ஆற்றின் பாலத்தில் தெற்கு மூலையில் உள்ள மது விலக்கு செக்போஸ்ட் அருகில் வாகன தணிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது பாலத்தில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்த பின்னர் பெயர், விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட ஆஜர் எதிரி அறிவு என்ற அறிவழகன் மற்றும் கோபி என்பவர் எங்களை பார்த்ததும் சந்தேகத்திற்கு இடமாக திரும்பி சென்றவர்களை பார்ட்டி சகிதம் வளைத்து பிடித்து சோதனை செய்தபோது எதிரி கோபி என்பவர் தன் இடுப்பு பக்கத்தில் ஒரு கத்தி மறைத்து வைத்திருந்ததை சோதனை செய்து எதிரிகளை விசாரித்தபோது எவ்வித அச்சுறுத்தலுமின்றி விசாரணை செய்ததில் அறிவு என்ற அறிவழகன் என்பவர் காலை 10.30 மணிக்கு தாமாக முன் வந்து கொடுத்த ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் அண்ணாமலை மற்றும் சிவசுப்பிரமணியன் ஆகியோர்கள் முன்னிலையில் பல்வேறு இடங்களில் திருட்டு மற்றும் குற்ற சம்பவங்களில் ஈடுபட்டிருந்ததாக கூறினார். பின்னர் இவ்வழக்கிலும் சம்பந்தப்பட்டதாக தெரியவந்தது. பின்னர் எதிரிகள் இருவரும் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி தன் வீட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த சுமார் 63 1/2 செ.மீ நீளமுள்ள 40 கிராம் தங்க தாலி சரடை 15.00 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் மகசரில் கைப்பற்றியும் கோபி என்பவர் 14.30 மணிக்கு தனது வீட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த சுமார் 4 கிராம் தங்க தாலி, 2 கிராம் தங்க காசு ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்னிலையில் மகசரில் கைப்பற்றியும் பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துக்கள் சகிதம் நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து களவு சொத்துக்களை படிவம் 95ன் மூலம் நீதிமன்றத்தில் எதிரிகளுடன் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் சாட்சிகள் அண்ணாமலை மற்றும் சிவசுப்பிரமணியன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து

வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் 27.03.2017ம் தேதி விசாரணை முடித்து எதிரிகள் மீது சட்ட் பிரிவுகள் 457, 380, உடன் இணைந்த 392 இதசவின் கீழ் சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **மேற்படி சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எதிரிகள் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

நான் முதல் விசாரணையில் சொல்வது போல் எந்த சாட்சிகள் முன்னிலையிலும் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எதிரிகளிடமிருந்து எந்தவிதமான ஒப்புதல் வாக்குமூலமும் பெறவில்லை என்றாலும்அவர்கள் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே இவ்வழக்கில் RCS ஆக முடித்த உதவி ஆய்வாளர் பரமேஸ்வரன் என்பவரை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எதிரிகளை சொன்ன விதத்தில் சொன்ன நேரத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் அ.சா.ஆ.10 தயார் செய்த மாதிரி வரைபடத்தின் படி சம்பவ இடமானது புகார்தாரர் வீட்டின் உள்ளே நடந்ததாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் நெல்லிக்குப்பம் காவல் நிலையத்தில் எவ்வளவு ஆண்டு பணி புரிந்தேன் என்றால் 3 ஆண்டுகளாக பணி புரிந்தேன். சோழவள்ளி என்ற ஊர் நெல்லிக்குப்பத்தில் இருந்து வடக்கு பக்கம் 500 மீட்டர் தொலைவில் உள்ளது என்றால் சரியல்ல. 1 கிலோ மீட்டர் துாரம் இருக்கும். சோழவள்ளி என்ற ஊர் எனது காவல் நிலையத்தில் இருந்து வடக்கு பக்கத்தில் உள்ளதா அல்லது தெற்கு பக்கத்தில் உள்ளதா என்றால் வடக்கு பக்கத்தில் தான் உள்ளது. நெல்லிக்குப்பம் காவல் நிலையம் கடலுார் TO பண்ருட்டி கிழக்கு மேற்கு சாலையில் தெற்கு பக்கத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான். சோழவள்ளி காவல் நிலையத்தில் இருந்து வடக்கு பக்கத்தில் தான் உள்ளது தெற்கு பக்கத்தில் இல்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரி சோழவள்ளி ஊரைச்சேர்ந்தவர் இல்லை என்றால் சம்பவ சமயத்தில் அவர் அங்கு தான் வசித்திருந்தார். எதிரி சோழவள்ளில் வசிக்கவில்லை விஸ்வநாதபுரம் நடுத்திட்டு

என்ற ஊரில் தான் பிறந்ததிலிருந்து இன்று வரை குடியிருந்து வருகிறார் என்றால் அவரது பூர்வீகம் விஸ்வநாதபுரம் தான். சம்பவ சமயத்தில் சோழவள்ளியில் தான் இருந்தார். அவர் சோழவள்ளியில் தான் வசித்தார் என்று ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவர் சோழவள்ளியில் வசிப்பதற்காக எந்த சாட்சியும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். முடிந்துபோன வழக்கை சரிசெய்யவேண்டும் என்ற காரணத்திற்காக இவ்வழக்கை ஜோடித்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் எதிரிகள் குறித்து அடையாள அணி வகுப்பு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 9 வரையானவர்கள் புகார்தாரரின் உறவினர்கள் என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. சான்றுபொருட்கள் வழக்கிற்காக தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல.